## ஜூலை 11 – “மக்களுடன் முதல்வர்” மற்றும்

# ஜூலை 15 “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” விரிவாக்கம்!

## நிகழ்ச்சிகளில் பங்கேற்குமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் - அனைத்து எம்.எல்.ஏ. - எம்.பி.க்களுக்கும் கடிதம்!

**சென்னை, ஜூலை 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11-7-2024 மற்றும் 15-7-2024 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள “மக்களுடன் முதல்வர்” மற்றும் “முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட” விரிவாக்க நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள அழைப்பு விடுத்து அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 11.7.2024 அன்று, தருமபுரி மாவட்டத்தில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் விரிவாக்க நிகழ்ச்சியிலும்,

15.7.2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் “முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட” விரிவாக்க நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு, அவற்றைத் தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

அதேபோன்று, அன்றைய தினம் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்புடைய அமைச்சர் பெருமக்களும் இந்நிகழ்வினைத் தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

இந்நிலையில், மாவட்டங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனித்தனியே கடிதம் அனுப்பியுள்ளார்.

### 8.74 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு!

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வண்ணம் தன்னால் 18.12.2023 அன்று தொடங்கப்பட்ட “மக்களுடன் முதல்வர்” என்ற திட்டம் முதற்கட்டமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும், அதன்மூலம் மொத்தம் 8.74 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

நகரப்பகுதிகளில் இந்தத் திட்டத்திற்கு கிடைத்த வெற்றி மற்றும் வரவேற்பினையடுத்து, அடுத்தகட்டமாக அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளிலும் இதனை நடைமுறைப்படுத்திட திட்டமிட்டு, வருகிற 11-7-2024 அன்று தருமபுரி மாவட்டத்தில் தான் அதனைத் தொடங்கி வைக்க விருப்பதாகவும், அன்றைய தினம் விழுப்புரம் மாவட்டம் நீங்கலாக, மற்ற அனைத்து மாவட்டங்களிலும் தொடர்புடைய அமைச்சர் பெருமக்களும் இந்நிகழ்வினைத் தொடங்கி வைக்கவுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், மக்களின் தேவைகளை நன்குணர்ந்து அவற்றை நிறைவேற்றும் பொறுப்பில் உள்ள மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பகுதிகளில் 11.07.2024 அன்று நடைபெற உள்ள “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்களில் கலந்துகொண்டு சிறப்பு சேர்த்திட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெருத்த வரவேற்பு!

அதேபோன்று, 15.9.2022 அன்று தன்னால் தொடங்கி வைக்கப்பட்ட “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” பொது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும், இந்தத் திட்டத்தின்கீழ் தற்போது ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாள்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்பட்டு வருவதாகவும், 14,40,351 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர் என்றும் தனது கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, பல்வேறு ஆய்வுகளின் மூலமும், தமிழ்நாடு மாநில திட்டக் குழு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மதிப்பீடு செய்ததன் அடிப்படையிலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளதோடு, சத்தான உணவினை வழங்குவதன் காரணமாக பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகையும் அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், வேலைக்குச் செல்லும் தாய்மார்கள், காலை உணவு தயாரிக்கும் நேரம் மற்றும் பொருட்செலவு மீதமாவதோடு மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் படிப்புத்திறன் அதிகரித்துள்ளதை கண்டு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்து வருவதாக திட்டக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், ‘பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்’ என்ற தமது அரசின் உன்னத நோக்கத்தை எய்திடும் வகையில், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான 15.7.2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில், தான் அதனைத் தொடங்கி வைக்கவுள்ளதாகவும், அன்றையதினம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிக்குட்பட்ட ஊரகப் பகுதி யிலுள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

11.7.2024 அன்று விழுப்புரம் மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களிலும்; மேலும் 15.7.2024 அன்று அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ள மேற்படி திட்டங்களின் விரிவாக்க நிகழ்ச்சிகள் தொடர்பாக உரிய அறிவுரைகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்நிகழ்வுகளில் அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவும், ஆதரவினை வழங்கிடவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## கூத்தாநல்லூரில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த

# சிறுவனின் குடும்பத்தாருக்கு ஆறுதல் - ரூ. 2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 6-**

**திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் அருகே திருராமேஸ்வரம் கிராமம், கோட்டகச்சேரியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சிறு வனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் ரூபாய் 2 லட்சம் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் அவ்வறிவிப்பு வருமாறு:-

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், திருராமேஸ்வரம் கிராமம், கோட்டகச்சேரி பகுதியிலுள்ள கோவில் திருவிழாவிற்கு விளம்பரப் பதாகைகள் வைப்பதற்காக கடந்த 29.06.2024 அன்று இரவு சுமார் 11.30 மணியளவில் அக்கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் மதன்ராஜ் (வயது 15) த/பெ.ராமதாஸ் என்பவர் விளம்பரப் பதாகைகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது எதிர்பாராதவிதமாக அருகிலுள்ள மின்மாற்றியில் இரும்பு கம்பியுடன் கூடிய விளம்பர பதாகையில் உராய்வு ஏற்பட்டதன் காரணமாக மின்சாரம் தாக்கியதில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவன் ரூபன் (வயது 19) த/பெ.மாரியப்பன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவனின் பெற்றோருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

---

## நீலகிரி மாவட்டத்தில்

# பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

*நீலகிரி, ஜூலை 6-*

நீலகிரி மாவட்டத்தில், பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நியாய விலைக்கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரங்கள் குறித்தும், புதிய குடும்ப அட்டைகள் வேண்டி வரப்பெற்ற மனுக்களின் தற்போதைய நிலை குறித்தும், பயோமெட்ரிக் முறையில் விற்பனை பணி முன்னேற்ற விவரங்கள் குறித்தும், புதிதாக பகுதி நேர நியாய விலைக் கடைகள் தொடங்க பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் உட்பட பல்வேறு பொருட்கள் குறித்தும் சுற்றுலாத்துறை அமைச்சர் துறை அலுவலர்களுடன் கேட்டறிந்து, ஆய்வு மேற்கொண்டார்.



இதில் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, நியாய விலைக்கடைகளை மிகச் சிறப்பாக நடத்தி, பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வழங்கி வருகிறது. அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, பருப்பு, கோதுமை, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி வழங்கவும், குடும்ப அட்டைதாரர்களிடமிருந்து ஏதேனும் புகார்கள் அல்லது கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றால் அதனை உடனடியாக கருத்திற்கொண்டு, நிவர்த்தி செய்யும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், ஒவ்வொரு வட்ட வழங்கல் அலுவலரும் தங்களது வட்டாரத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒவ்வொரு நியாய விலைக் கடைகளையும் அவ்வப்போது திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் உட்பட தமிழ்நாடு முழுவதும் மண்ணெண்ணெய் பற்றாக்குறையாக உள்ளதாக தொடர்ந்து புகார்கள் வருகிறது. இது தொடர்பாக நமது முதலமைச்சர் அவர்கள் மற்றும் இத்துறையின் அமைச்சர் அவர்கள் ஆகியோர் தொடர்ந்து, கடிதம் வாயிலாக ஒன்றிய அரசுக்கு அதிகபடியாக மண்ணெண்ணெய் வழங்கிட வலியுறுத்தி வருகிறார்கள். நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பொருட்களை தரமாகவும், உரிய நேரத்திலும் வழங்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பந்தலூர் வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையினால் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத்துறையை மேம்படுத்த அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் களப்பணியின் போது கப்பியாம்புலியூர் பகுதியில், மாற்றுக்கட்சிகளில் இருந்து தி.மு. கழகத்திற்கு சுமார் நூறுக்கும் மேற்பட்டோர் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன், விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர். பொன்.கௌதம சிகாமணி, கழக மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி மற்றும் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் இராணிப்பேட்டை மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, பாக முகவர் பிச்சைமுத்து மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருச்சி (தெ) மாவட்டக் கழகச் செயலாளர், காணை (தெ) ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை தெற்கு ஒன்றியம், ராகவன்பேட்டை, கல்பட்டு ஆகிய கிராமங்களுக்கு உட்பட்ட 70 மற்றும் 73 பாகங்களில் காலை 7 மணி முதல் 10 மணி வரையில் வீடுதோறும் சென்று துண்டு பிரசுரம் வழங்கி வாக்குகள் சேகரித்தார். உடன் விழுப்புரம் (தெ) மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி, காணை (தெ) ஒன்றியத் தேர்தல் பொறுப்பாளர், மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாநில திட்டக்குழு உறுப்பினர் எழிலன், மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி, தேர்தல் பொறுப்பாளர், திருச்சி (கி) மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், ஒன்றிய கழகச் செயலாளர் கல்பட்டு ராஜா, ஒன்றிய பெருந்தலைவர் கலைச்செல்வி, தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பத்மபிரியா, கிளை கழகச் செயலாளர்கள் ஆரோக்கிய முத்து, முருகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி மன்ற தலைவர், கிளைச் செயலாளர்கள், கிளை பொறுப்பாளர்கள், திருச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.